ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதி விசேஷமானது

අංක 2396/55 - 2024 අගෝස්තු මස 09 වැනි සිකුරාදා - 2024.08.09

2396/55 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) – பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச.வ.பீ. 5/83 (III)

**1980 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, பீடைகொல்லிகளைக் கட்டுப்படுத்தற் சட்டம்**

1980 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, பீடைகொல்லிகளைக் கட்டுப்படுத்தற் சட்டத்தின் 26 ஆம் பிரிவின் கீழ் கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

**மஹிந்த அமரவீர**, (பா.உ.)
கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக்
கைத்தொழில்கள் அமைச்சர்.

கொழும்பு.
2024, யூலை 31.

**ஒழுங்குவிதிகள்**

2000, சனவரி 5 ஆந் திகதிய 1113/15 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1999 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, பீடைகொல்லிகளைக் கட்டுப்படுத்தல் (விற்பனைகள் மற்றும் வழங்குகை) ஒழுங்குவிதிகள், இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றன :-

(1) அதன் 2 ஆம் ஒழுங்குவிதியின் (5) ஆம் உப ஒழுங்குவிதியின் பந்தி (இ) இற்குப் பதிலாகப் பந்தியை இடுவதன்மூலம் :-

“ (இ) இரண்டாயிரம் ரூபா கட்டணமொன்றுடன் சேர்த்தனுப்பப்படுதல் வேண்டும்.”

(2) அதன் 2 ஆம் ஒழுங்குவிதியை உடனடுத்துப் பின்வரும் புதிய ஒழுங்குவிதிகளைச் சேர்ப்பதன்மூலம் :-

“ 2அ (1) விற்பனைக்கான சான்றிதழ் வழங்கப்பட்ட திகதியிலிருந்து பன்னிரெண்டு மாதங்களின் பின்னர் அதனது புதுப்பித்தலுக் காகச் செய்யப்படும் விண்ணப்பம் ஒவ்வொன்றும், ஒவ்வொரு பிந்திய ஆண்டுக்கும் ஐயாயிரம் ரூபா கட்டணமொன்றுடன் சேர்த்து அனுப்பப்படுதல் வேண்டும்.



இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

(2) கமத்தொழில் இரசாயனப் பொருட்களின் விற்பனைகள் மற்றும் தொழில்நுட்ப உதவி பற்றிய பயிற்சிக்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும், இருநூறு ரூபா கட்டணமொன்றுடன் சேர்த்து அனுப்பப்படுதல் வேண்டும் ;

(3) கமத்தொழில் இரசாயனப் பொருட்களின் விற்பனைகள் மற்றும் தொழில்நுட்ப உதவி பற்றிய பயிற்சிக்குத் தகவுடைய ஆள் ஒவ்வொருவரும், ஐயாயிரம் ரூபாவைச் செலுத்த வேண்டியவராதல் வேண்டும் ; அத்துடன்

(4) கமத்தொழில் இரசாயன விற்பனை மற்றும் தொழில்நுட்ப உதிவியாளர்கள் பயிற்சி சான்றிதழ் ஒன்றைப் புதுப்பிப்பதற்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும் வழங்கப்பட்டதன் மூன்று ஆண்டுகளின் பின்னர் இரண்டாயிரம் ரூபா கட்ட்ணமொன்றுடன் சேர்த்து அனுப்பப்படுதல் வேண்டும்.”.

EOG 08-0118